**DEPOSITION OF WITNESS**

---

**MCOP. No. 2811/2023** **DATE:24.02.2025**

Deposition of Witness : P.W.1

Name : Mr. Vikram

Father/Husband Name : Mr. Sriram

Age :

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) if the 24th day of February 2025.

---

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**

கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல். அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டவைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய தரப்பில் கூடுதல் ஆவணங்களாக மசாஆ 29 முதல் 31 வரை குறியிடப்படுகின்றன. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஏற்கனவே இருந்த உரிமையாளரன் பெயரைக்கொண்டு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அவர் அந்த வாகனத்தினை கலைச்செல்வி என்பவருக்கு விற்றுவிட்டார். ஆக அந்த கலைச்செல்வி என்பவர்தான் காரின் உரிமையாளர் என்ற விவரம் எனக்கு தெரியுமா, அவர்தான் உரிமையாளர் என்று தெரிந்த பிறகு அவரை தரப்பினராய் சேர்ப்பதற்கு நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இந்த விபத்தை ஏற்படுத்தியவருக்கும் கலைச்செல்வி என்பவருக்கும் சம்பந்தமில்லை என்பதால் எந்த நடவடிக்கையும எடுக்கவில்லை. அப்படியென்றால் தற்போது என்னிடம் காட்டப்படும் RCஐ நான் எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் வழக்கு சம்பந்தமாக வேண்டிய ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பிக்கவேண்டியது என்னுடைய கடமை என்பதால் தாக்கல் செய்துள்ளேன். மசாஆ 30 ஆவணம் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. நான் இந்த

வழக்கிற்காக வேண்டி இந்த ஆவணத்தை தயார் செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. மசாஆ 31 இவ்வழக்குடன் தொடர்புடையதே அல்ல என்று சொன்னால் சரியல்ல. Third Party Liability காட்டப்பட்டிருக்கிறதா என்றால் காட்டப்பட்டிருக்கிறது. அதில் ரூ.5,286/- என காட்டப்பட்டிருக்கிறது. காப்பீட்டு நிறுவனத்திலிருந்து நேரடியாக வந்து சாட்சி சொன்னால்தான் மசாஆ 31 ன் உண்மைத்தன்மையை அறிந்துகொள்ள முடியும என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடிக்கு உகந்தது என்றாலும் 2ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை-** இல்லை.

Taken down by me/before me in Open Court, interpreted/read over to the Witness and admitted by him/her to be correct.
Date:24.02.2025.

Sd/- V. R. Latha,
Chief Judge,
Court of Small Causes.